**CC.No**.112/2025

**Date**: 11.05.2026

**ம.சா.** 1. செல்வம், த/பெ. சேது, காரைக்குடி

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) ம.சா.ஆ.3 அறிவிப்பு அனுப்பும்போது வழக்கு தொடர்பான அனைத்து விபரங்களும் எனது வழக்கறிஞரிடம் கூறினேனா என்றால் கூறினேன். எந்த இடத்தில் வைத்து எதிரி காசோலை கொடுத்தார் என்ற விபரத்தை ம.சா.ஆ.3 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், பத்திர அலுவலகத்தில் வைத்துக்கொடுத்தார். எதற்காக எதிரி பணம் தரவேண்டும் மற்றும் எந்த தேதியில் எதிரி பணம் தரவேண்டும் என்ற விபரத்தை ம.சா.ஆ.3 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், இடத்திற்காக தரவேண்டும். சொத்துவிற்பனை மற்றும் விடுதலை பத்திரம் தொடர்பாக எனது புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த விபரத்தை ம.சா.ஆ.3 ல் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ரூ.2,25,00,000/- எதிரி தரவேண்டும் என்று புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருக்கும்பட்சத்தில் ம.சா.ஆ.3 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) புகாரில் குறிப்பிட்டுள்ள நிலம் தொடர்பான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். நான், எதிரி, இரவிசந்திரன், இராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 18.05.2007 ல் நானும் செல்வமும், பவர்கொடுத்து அதன் அடிப்படையில் எதிரி முத்துலெட்சுமி என்பவரிடம் இருந்து ஒரு இடம் பெற்றார் என்றால் சரிதான். **( 18.05.2007 உடைய கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் எ.ம.சா.1 ஆக குறியிடப்படுகிறது. )** எதிரி பெற்ற சொத்து எ.ம.சா.1 என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 சொத்து தொடர்பாக சிவகாமி என்பவர் என் மீது மற்றும் சகோதரர்கள் மீதும் பல்வேறு சிவில் வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்குகளில் பவர் ஏஜென்ட் என்ற முறையில் வழக்கை சதகமாக தீர்ப்பு பெற்றுக்கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி அந்த சொத்தை ஜெயசித்ரா என்பவருக்கு விற்பனை செய்ததால் நான் எதிரி மற்றும் ஜெயசந்திரா மீது சிவில் வழக்கு O.S No.

87/2025 சிவகங்கையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு பின்பு எதிரி மீது காரைக்குடி டவுன் காவல் நிலையத்தில் 23.03.2025ல் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். காவல் கண்காணிப்பாளருக்கும் சொத்து தொடர்பாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதனால் எனக்கும் எதிரிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு பேசிக்கொள்வதில்லை என்றால் சரிதான். இடத்தை பெற்ற ஜெயசித்ரா எனன்னிடம் சமரசம் பேசியதால் O.S No. 87/2025 வழக்கை நான் திரும்ப பெற்றேன் என்றால் சரிதான். 17.04.2025ல் ஜெயசித்ராவும் நானும் சம்மதபத்திரம் நிறைவேற்றிக்கொண்டோம் என்றால் சரிதான். **(17.04.2025 தேதியுடைய சம்மத பத்திரம் எ.ம.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது.** ) அந்த சம்மத பத்திரம் எ.ம.சா.ஆ.2 என்றால் சரிதான்.

3) " லேட் கேது அவர்களின் மகனும், என் சகோதரருமான அழகு சுந்தரத்தை என் பவர் ஏஜென்டாக நியமனம் செய்து காரைக்கு 3 நிர் இணை சார்பதிவாளர் அலுவலத்தில் 4 ம் புத்தகம் 509/2007 ம் எண்ணாக ஜெனரல் பவர் பத்திரம் பதிவு செய்து கொடுத்திருந்தேன். கிரைய பதிவு செய்து கொடுத்துள்ளர். இந்நிலையில், கிரைய பத்திரத்தில் எனக்குரிய கீழ்கண்ட சொத்திற்கான கிரைய பங்கு தொகை ரூ.2,28,00,000/−ஐ ( ரூபாய் இரண்டு கோடியே இருபத்தி எட்டு இலட்சம்) நான் பெற்றுள்கொண்டுவிட்டபடியால் இந்த சம்மத பத்திரம் மூலம் நான் மேற்கூறிய கிரையப்பத்திரத்தை (ஆவண எண் 49/2025) ஒப்புக்கொண்டு இந்த சம்மத பத்திரத்தை எழுதிக்கொடுத்திருக்கிறேன்" என்று எ.ம.சா.ஆ.2ல் உள்ளது என்றால் சரிதான், ஆனால் பணம் கொடுக்கவில்லை. சம்மதபத்திரத்தில் குறிப்பிட்டு ஜெயசித்ராவின் இடத்தைதான் தற்போதைய புகார் மற்றும் பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது சகோதரர்கள் மற்றும் தகப்பனார் அனைவரும் காரைக்குடியில் வெள்ளி தொழில் செய்து வந்தோம் என்றால் சரிதான். எனது அப்பா மற்றும் எதிரி நன்கு படித்தவர்கள் என்பதால் தொழில் தொடர்பாக வெளியூர் செல்வார்கள் மற்றும் பரிவர்த்தனைக்காக காசோலை பயன்படுத்துவார்கள் என்றாலும் மற்ற சகோதரர்கள் காரைக்குடியில் இருந்து பணி பார்ப்பார்கள் என்றால் சரிதான். கூட்டுக்குடும்ப வீட்டை விட்டுவிட்டு எனது சகோதரரான எதிரி அவரது மனைவியின்

கரூர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றால் சரிதான். காரைக்குடியில் எதிரியின் வீட்டை உடைத்து அவரது பொருட்கள் மற்றும் காசோலை எடுக்கப்பட்டது என்று என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நானும் அவர் மீது புகார் கொடுத்துள்ளேன். வழக்கு காசோலையை வங்கியில் நான் செலுத்துவதற்கு முன்பாகவே எதிரி அதற்கு வங்கியில் stop payment வலியுறுத்தியுள்ளார் என்றால் சரிதான்.

4) ரவிசந்திரன் எதிரியின் மீது ஏதாவது சொத்து தொடர்பான வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான், எனது சகோதரர்கள் சேர்ந்து ஒரே வீட்டில் தனித்தனி போர்சனில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரி சொத்திற்காக 17.04.2025 ல் வழக்கு காசோலை கொடுத்தார் என்பது பொய் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கொடுத்த பவர் தொடர்பாக 17.04.2025 அன்று ஜெயசித்ரா சொத்திற்கான பணத்தை எ.ம.சா.ஆ.2 சம்மத பத்திரத்தின் மூலம் எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சொத்து விற்பனை தொடர்பாக எதிரி எனக்கு ஏதாவது தொகை தரவேண்டும் என்று ஏதாவது ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. சொத்து பங்கு போக கமிஷன் தொகை எதிரிக்கு அதிகமாக கிடைத்தது என்பதற்கான காழ்ப்புணர்ச்சியில் வியாபாரத்திற்காக எதிரி பெட்டியில் வைத்திருந்த வழக்குகாசோலையை தவறாக பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படி எந்த ஒரு தொகையையும் தர கடமைபட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் மீது புகார் கொடுத்தபோது காவல் விசாரணையின் போது பிரச்சனையாகி நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் கேட்டுக்கொள்ளும்படி கூறினார்கள் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.11 17:15:05 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.